# காலத்தின் கொடையைக் கண்போலக் காப்போம்!

**கொ**ரோனாவுக்கு மருந்து இல்லை என்பது மட்டுமல்ல, கொரோனா என்ன வகைப்பட்ட நோய் என்பதே கண்டு பிடிக்கப்படாத காலத்தில் கொரோனா வார்டுக்குள் அவர் சென்றது உயிரைப் பற்றிக் கவலைப்படாத வீரம்.

ஒன்றிய அரசின் கண்காணிப்பாள ராகவே இருந்தாலும், 'இது எங்கள் தமிழ்நாடு, இங்கு நாங்கள் வைத்தது தான் சட்டமும் நீதியும்' என்று தமிழ்நாடு சட்ட மன்றத்துக்குள் காட்டியது தமிழன் என்ற துணிச்சல்.

'டெல்லிக்கு தமிழ்நாடு எப்போதும் அவுட் ஆஃப் கண்ட்ரோல் தான்' என்று சொன்னது தன்மானமுள்ள தமிழன் என்பதன் அடையாளம்.

எதேச்சதிகாரம் காட்டும் அரசை, ' நீ மாநிலங்களை ஒன்றிணைக்கும் ஒன்றிய அரசு தானே?' என்று சொல்லும் அரசமைப்புச் சட்ட அஞ்சாமை.

சமூகநீதியில் துளியும் சமரசம் இல்லாமல், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் என்ற சட்டம் முதல் சமூக நீதி விடுதிகள் வரை செயலில் பெரியாராய்.



ஆர்ப்பாட்டம் இல்லை, போர்ப்பாட்டு இல்லை. தான் நினைத்ததை சத்த மில்லாமல், அதே நேரத்தில் மிச்சம் வைக்காமல் செய்து காட்டுவதில் அமைதி தவழும் அண்ணாவாய்.

' நான் மிகமிக சாதாரண மக்களின் பிரதிநிதி. கோட்டையில் இருந்தபடியே குடிசைகளைப் பற்றியே சிந்திப்பேன்' என்ற கலைஞரின் அடியொற்றி அப்படியே.

''வீதியோரத்தில் வேலையற்றதுகள். வேலையற்றதுகளின் எண்ணத்தில் விபரீதங்கள். இதுதான் வேந்தே காலத்தின் குறி” என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா. இவர்களுக்காகவே அத்தனை திட்டங்களும்.

'காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?' என்று கேட்கிறார். 'சாப்பிடவில்லை' என்கிறார் ஒரு மாணவி. 'டீ குடித்தேன்' என்கிறார் இன்னொருவர். 'பன் சாப்பிட்டேன்' என்கிறார் மற்றொருவர். மூன்று பேர் சொன்ன பதிலும்

**ப.திருமாவேலன்**

முதலமைச்சரை முகம் மாற வைக்கிறது. தொடங்கப்பட்டது காலை உணவுத் திட்டம். 19 லட்சம் பிள்ளைகளின் முகம் தினம்தோறும் மலர்கிறது. இவர்கள் யாருக்கும் வோட்டு இல்லை.

பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு மாதம் 2 ஆயிரம் தரப்படுகிறது. அந்தப் பிள்ளைகளுக்கு தி.மு.க. என்றால் என்னவென்று தெரியாது. பத்தாயிரம் குழந்தைகளின் முன்னேற்றத்துக்கு முன்னெழுத்தாக இருக்கிறார் முதலமைச்சர்.

12ஆம் வகுப்பு முடித்தால் படித்தது போதும் என்று நிறுத்தப்பட்டார்கள் மாணவிகள். ஆயிரம் ரூபாய் தருவதால் வீடுகளில் இருந்து மாணவிகள் கல்விச் சாலைக்கு அனுப்பி வைக்கப்படு கிறார்கள். மூன்றாண்டுக்கு முன் கல்வியை நிறுத்தியவர், மீண்டும் வருகிறார் கல்லூரிக்கு. கல்விக் கண்ணைத் திறப்பது என்பது இதுதானே?

ரேசன் பொருள் வீடு தேடி வருகிறது முதியோருக்கும், மாற்றுத்திறனாளி களுக்கும். அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்வது பொருள்கள் மட்டுமல்ல, தலைமைச் செயலகமே வந்து வணங்கி



நிற்கிறது.

டாடாசந்திரசேகர், 'நிறையநிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறது. அதற்கு ஊழியர்களாக தகுதி வாய்ந்த தமிழ்நாட்டு இளைஞர்களை உருவாக்குங்கள்' என்கிறார். 'நான் முதல்வன்' திட்டத்தில் இதுவரை 48 லட்சம் மாணவ,மாணவியர் பயிற்சி பெறுகிறார்கள். எல்லோரையும் அவரவர் துறையில் முதல்வன் ஆக்குகிறார்.

தொழில் தொடங்க வருபவர்கள் அனைவரிடமும் எத்தனை பேருக்கு வேலை கொடுப்பீர்கள், அதிலும் பெண்கள் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும்



என்று கேட்பதன் மூலம் மனித சக்திக்கு சக்தி கொடுத்து வருகிறார்.

'ஆயிரம் ரூபாய் யார் கொடுப்பா?' என்று கதறியபடி யு டியூப்புகளில் பெண்கள் அளிக்கும் பேட்டிகளை பார்க்கும் போது, ஆயிரமாண்டுத் திட்டமாக அது மின்னுகிறது.

அதன் அடிமடியிலும் கை வைக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டபோது 5 ஆயிரம் ரூபாயைக் கொடுக்கச் சொல்கிறார். ஒரே நாளில் 6500 கோடி பணம் பொதுமக்கள் கைக்குப் போகிறது. 6 ஆயிரம் கோடி வணக்கம் அல்லவா இது?

'ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து பயணிக்கும்போது சுதந்திரமாய் இருக்கிறது' என்று சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் படிக்கும் சேலத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் விடியல் பயணத்தை தனது விடியலாய் பார்க்கிறார்.

சொந்தமாக நிலமில்லை. ஆனால் வானத்தை கற்பனையால் வளைத்துக் கொண்டு இருந்தவர்களுக்கு எல்லாம் பட்டா. 23 லட்சம் பேருக்கு பட்டா கொடுத்து நிலமகள் ஆக்கினார்.

'ஊருக்குள் முடக்கப்பட்ட நான், உலகம் முழுக்க பயணிக்கிறேன்' என்று பேட்டி தரும் விளையாட்டு வீரர்களும் வீராங்க னைகளும் பெருகிவிட்டார்கள். போட்டி களுக்குப் போக பல லட்சம் தரப்படுகிறது. போட்டியில் வென்றால் கோடிகள் கிடைக்கிறது.

'பறவைகளுக்குக் கூட கூடுகள் உண்டு, மனிதனுக்கு இல்லை' என்று வருந்தியவர் வாட்டம் போக்கி வருகிறது கலைஞரின் கனவு இல்லங்கள்.

மருத்துவமனைகளை நோக்கி மக்கள் வரத் தேவையில்லை. வீடுகளை நோக்கி மருத்துவர்கள் வந்து 2.55 கோடி பேரை குணப்படுத்தி இருக்கிறார்கள்.

சாலை விபத்தில் அநாதைகளாக உயிர் துறக்கும் நிலையில் இருந்தவர்களை காக்கும் அரசு இது.

உயர்கல்வி பயில பல லட்சம் பெற்று உலக பூமிப்பந்தை சுழற்றுகிறார்கள் நம் மாணவ,மாணவிகள். 385 பேருக்கு 160 கோடி தரப்பட்டுள்ளது என்றால் பாருங்கள்.

அரசு ஊழியர்களின் 22 ஆண்டு பிரச்சி னைக்கு உடனடியாக தீர்வு கிடைத்துள்ளது. அரசு ஊழியர்கள் வேலைகாலம் மட்டுமல்ல ஓய்வுக் காலமும் நிம்மதியாக.

தூய்மைப் பணியாளர்களுக்கு தினந்தோறும் காலையில் உணவு வழங்கப்படுகிறது.

இவை எல்லாம் அரசியலுக்காக செய்யப்பட்டவை அல்ல. ஆபத்பாந்த வனாகச் செய்யப்படுபவை.

வெறும் திட்டம் அல்ல இவை. வெறும் கணக்கீடு அல்ல இவை. கருணை இருப்பவரால் மட்டும் இத்தகைய திட்டக்கணக்கைப் போட முடியும். கருணைக் கணக்கு எல்லாராலும் போட முடியாது.

பெரியார் இன்று இருந்திருந்தால் அவரை கொள்கை, கொள்கை, கொள்கை என்று சொல்லி இருப்பார்!

அண்ணா இன்று இருந்திருந்தால் அவரை வளர்ச்சி, வளர்ச்சி, வளர்ச்சி என்று சொல்லி இருப்பார்!



கலைஞர் இன்று இருந்திருந்தால் அவரை கருணை, கருணை, கருணை என்று சொல்லி இருப்பார்!

காலத்தின் கொடை என்கிறது தமிழ்நாடு!

காலத்தின் கொடையைக் கண்போலக் காப்போம்!

# மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

முதல் பக்கத் தொடர்ச்சி

இருக்காது. ஆனால், இப்போது தமிழ்நாட்டில் இருக்கின்ற யாரை கேட்டாலும், நம்முடைய சேகர்பாபு அவர்களின் பெயரை பளிச்சென்று சொல்வார்கள். அந்தளவுக்கு நாள்தோறும் ஏதாவது ஒரு விழா, ஒரு கோயிலை புதுப்பிப்பது என்று அவர் செய்து கொண்டே இருக்கிறார். இன்னும் பெருமையாக சொல்ல வேண்டும் என்றால், நான் அதிகமாக் எந்த துறையினுடைய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டீர்கள் என்று யாராவது கேட்டால், இந்து சமய அறநிலையத் துறை நிகழ்ச்சிகள் என்று உடனே பதில் சொல்லி விடலாம். அந்தளவுக்கு, சிறப்பாக, வேகமாக செயல்படுகிறார் நம்முடைய சேகர்பாபு அவர்கள்!

### அறநிலையத் துறையின் சாதனைகள்!

அறநிலையத் துறை சார்பில் செய்யப்பட்டிருக்கின்ற சாதனைகளின் சில புள்ளிவிவரங்களை இப்போது தலைப்புச் செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு, நம்முடைய அரசு பொறுப்பேற்ற ஆயிரத்து 759 நாட்களில், 4 ஆயிரத்து 335 கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது.

அனைத்து சாதி அர்ச்சகர் திட்டத்தின் கீழ், 29 அர்ச்சகர்களை பணி நியமனம் செய்திருக்கிறோம்.

12 பெண் ஓதுவார்கள் உட்பட 46 ஓதுவார்களை பணி நியமனம் செய்திருக்கிறோம்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக, இந்தத் துறையில், 813 நபர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

நீண்ட ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 946 அலுவலர்களின் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது.

அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களின் ஓய்வூதியம் 5 ஆயிரம் ரூபாயாகவும், அவர்களது குடும்ப ஓய்வூதியம் 2 ஆயிரத்து 500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கி இருக்கிறோம்.

19 ஆயிரம் ஒரு கால பூசை திட்ட திருக்கோயில்கள் அர்ச்சகர்களுக்கு மாதந்தோறும் ஊக்க தொகையாக ஆயிரத்து 500 ரூபாயை வழங்கிக் கொண்டு வருகிறோம்.

221 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 616 குடியிருப்புகளை கட்டித் தந்திருக்கிறோம்.

பணிக்காலத்தில், இயற்கை எய்திய திருக்கோயில் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு, குடும்ப நல நிதியாக 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

திருக்கோயில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை கட்டணமில்லா முழு உடல் பரிசோதனை திட்டமும் செயல்படுத்தப்பட்டிருக்கிறது.

கிராம கோயில் பூசாரிகளுக்கான ஓய்வூதியம் 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது.

கோயில் சொத்துகளை மீட்கவேண்டும் என பெருமுயற்சி எடுத்து, அதிலும் சாதனை படைத்திருக்கிறோம்.

8 ஆயிரத்து 440 கோடி ரூபாய் மதிப்பிலான 8 ஆயிரத்து 140 ஏக்கர் நிலங்களை மீட்டிருக்கிறோம்.

இப்போது, நான் சொன்ன சாதனைகள் எல்லாம் மிகவும் குறைவுதான். பெரிய சாதனை புத்தகத்தின் சில பக்கங்கள்தான்! ஏராளமான சாதனைகள் இருக்கிறது.

### பூசாரிகளின் நலனுக்காக 11 அறிவிப்புகள்!

எந்த நிகழ்ச்சிக்குச் சென்றாலும், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற அறிவிப்புகளை வெளியிடுவது வழக்கம்! அப்படி இருக்கும்போது, உங்களின் இந்த மாநாட்டுக்கு வந்துவிட்டு புதிய அறிவிப்புகளை வெளியிடாமல் இருக்க முடியுமா? அதனால், பூசாரிகளின் நலனுக்கான 11 புதிய அறிவிப்புகளை வெளியிட விரும்புறேன்.

**முதலாவது அறிவிப்பு** – ஒவ்வொரு ஆண்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் புத்தாடை வழங்கப்படும்.

**இரண்டாவது அறிவிப்பு** – உறுப்பினர் மரணம் அடைந்தால், அவருடைய வாரிசுதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் தொகை 50 ஆயிரம் ரூபாயில் இருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**மூன்றாவது அறிவிப்பு** – கிராம கோயில் பூசாரிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆண்டு வருமான உச்சவரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக ஏற்கனவே உயர்த்தப்பட்டுள்ளது ! தற்போது உங்களுடைய கோரிக்கையை ஏற்று ஆண்டுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.

**நான்காவது அறிவிப்பு** – இயற்கை எய்திய உறுப்பினரின் ஈமச்சடங்குக்காக தற்போது வழங்கப்படும் தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**ஐந்தாவது அறிவிப்பு** – அருகாமையில் இருக்கின்ற பெரிய திருக்கோயில்கள் மூலம் ஆண்டுதோறும் 500 பூசாரிகளுக்கு, தேர்ந்த பயிற்றுநர்களை கொண்டு புத்தொளிப் பயிற்சி நடத்தப்படும்.

**ஆறாவது அறிவிப்பு** – தற்போது பூசாரிக்கு 3 ஆயிரம், பூசாரிகளின் மகனுக்கு 3 ஆயிரம், மகளுக்கு 5 ஆயிரம் என திருமணத்துக்கு வழங்கப்படும் நிதி உதவி, மேலும் ஆயிரம் ரூபாய் உயர்த்தப்படும்.

**ஏழாவது அறிவிப்பு** – பூசாரிகளின் மகன், மகளுக்கு தற்போது வழங்கப்படும் பள்ளிக்கல்வி நிதி உதவி, மேலும் ஆயிரம் ரூபாய் உயர்த்தப்பட்டு, 2 ஆயிரம் மற்றும் 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**எட்டாவது அறிவிப்பு** – பூசாரிகளின் மகன், மகளுக்கு தற்போது ஒவ்வொரு கல்வி ஆண்டும் வழங்கப்படும் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு நிதி உதவி ஆண்டுக்கு மேலும் 2 ஆயிரம் ரூபாய் உயர்த்தப்படும்.

**ஒன்பதாவது அறிவிப்பு** – பூசாரிகளின் மகன், மகளுக்கு தற்போது ஒவ்வொரு கல்வி ஆண்டும் வழங்கப்படும் தொழில் சார்ந்த இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு நிதி உதவி, ஆண்டுக்கு மேலும் 2 ஆயிரம் ரூபாய் உயர்த்தப்படும்.

**பத்தாவது அறிவிப்பு** – பூசாரிகளின் மகன், மகள் தொழிற் பயிற்சி நிலையத்தில் பயில ஆண்டுக்கு மேலும் ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

**பதினோராவது அறிவிப்பு** – உறுப்பினர்களுக்கு மூக்குக் கண்ணாடி வாங்க தற்போது வழங்கப்படும் 500 ரூபாய் நிதி உதவி ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

மகிழ்ச்சியா? நானும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் மகிழ்ச்சி என்றால், நானும் மகிழ்ச்சி.

சமரசமும் - சமத்துவமும்தான் ஆன்மீகப் பாதையாக இருக்க முடியும்! நம்மைப் பொறுத்தவரைக்கும், சமத்துவத்தை போற்றும் அனைவரையும் நாம் போற்றுவோம்! மக்களுடைய சுயமரியாதையும் - உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும்! அதை நாம் சரியாக செய்வதால் தான், ஆன்மீகப் பெரியோர்கள் தொடர்ந்து நமக்கு ஆதரவாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் இத்தகைய சமத்துவமும், சகோதரத்துவமும் நிலைபெற வேண்டும். மக்களுக்குள்ளே ஒற்றுமைதான் ஓங்கி வளரவேண்டும்! மக்களை பிரிக்க நினைக்கின்ற கும்பல்களை அடையாளம் கண்டு புறக்கணிக்க வேண்டும்!

இங்கே வந்திருக்கின்ற பக்தர்களுக்கும், ஆன்மீக அன்பர்களுக்கும், திருக்கோயில் பணியாளர்களுக்கும் கொடுக்கின்ற வாக்குறுதி என்பது, உங்கள் நலன் காக்க, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன். உங்கள் ஆதரவோடு திராவிட மாடல் ஆட்சி தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

# தொகுதிப் பங்கீடு : தி.மு.க. - காங்கிரஸ் கட்சி பேச்சுவார்த்தை!



2026 சட்டமன்ற பொதுத் தேர்தலையொட்டி கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையிலான தி.மு.க. குழுவினர், நேற்று அண்ணா அறிவாலயத்தில், காங்கிரஸ் கட்சி மாநிலத் தலைவர் கு.செல்வபெருந்தகை எம்.எல்.ஏ., ராஜேஸ் குமார் எம்.எல்.ஏ., கீரிஸ் சோடல்கர், நிவேதித் ஆல்வா ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

# மணிப்பூர் போகாத மாமனிதர் மதுரை வருகிறார்!

குஜராத் வெள்ளத்திற்கு ரூ1000 கோடி உடனே கொடுத்த...

தூத்துக்குடி நெல்லை பெருவெள்ளம் பற்றி வாயே திறக்காத மௌனி மதுரை வருகிறார்.

ஏழரை லட்சம் கோடி ஊழல் என CAG அறிக்கை மூலம் அம்பலமான அரசின் தலைவர் மதுரை வருகிறார்.

இந்திய ரெயில்வே ஆயுள் காப்பீடு உட்பட பல்வேறு அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்கிய மாமனிதன் மதுரை வருகிறார்.

இறந்த பிணங்களுக்கு வைத்தியம் பார்த்தேன் என ஊழல் செய்த ஊழலின் ஊற்றுக் கண் மதுரை வருகிறார்.

மூவாயிரம் கோடி மக்கள் பணத்தில் படேலுக்கு சிலை சீனாவின் தயாரிப்பாக நிறுவிய சுதேசி மதுரை வருகிறார்.

பத்து லட்சம் ரூபாய் செலவில் ஒரு முறை உடை அணியும் ஏழை பங்காளன் மதுரை வருகிறார்.

ரயில் பயணிகளின் கட்டணச் சலுகைகளை சுத்தமாக நீக்கி வஞ்சித்த தலைவர் மதுரை வருகிறார்.

பணமதிப்பிழப்பு என்று சொல்லி நம்மை நடுத்தடத்தில் அலையவிட்ட அதிசயத்தை நிகழ்த்திக் காட்டிய அந்த நபர் மதுரை வருகிறார்.

பெட்ரோல் டீசல் விலையை குறைப்பேன் என்று உதார் விட்டு பொறுப்பேற்ற நாள் முதல் எரிபொருள் விலையை



உயரத்திலேயே வைத்திருக்கும் கார்ப்பரேட் கைக்கூலி மதுரை வருகிறார்.

பாபர் மசூதியில் ராமனுக்கு கோயில் கட்டிய மதநல்லிணக்கவாதி மதுரை வருகிறார்.

எதிர்க்கட்சி சட்டமன்ற,நாடளுமன்ற உறுப்பினர்களை நல்ல விலைக்கு வாங்கும் குஜராத் வியாபாரி மதுரை வருகிறார்.

அரிசிக்கு வரி உயர்த்தி கோதுமைக்கு வரியை குறைத்த கோமகன் மதுரை வருகிறார்.

டெல்லியில் விவசாயிகளின் போராட்டத்தை திரும்பிப் பார்க்காத தீரர் மதுரை வருகிறார்.

ஓ...தேர்தல் வருகிறது.

மீண்டும் அவர் அரசு வந்தால் அவர் மதுரை வரவேண்டிய தேவையே இருக்காது. காரணம் தேர்தலே வராது.